நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள். 30.08.2023.

அன்புடையீர்,

இந்நகர்மன்றம் ஆகஸ்டு–2023 ஆம் மாத அவசர கூட்டம் வருகிற 31.08.2023 ஆம் தேதி வியாழக்கிழமை 1.00 மணிக்கு தந்தை பெரியார் நகர்மன்ற கூட்டத்தில் நடைபெற உள்ளது. கூட்டபொருள்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தாங்கள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

30/8/2023

தலைவர்,
ஆத்தூர் நகராட்சி.

## ஆத்தூர் நகராட்சி

## நகர் மன்றத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.

ஆத்தூர் நகராட்சிக்குச் சொந்தமான அண்ணா கலையரங்கத்தினை பழைய வடிவமைப்பு மாற்றப்படாமல் நவீன முறையில் புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளை M/S Rasi Seeds (P) Ltd Chairman Dr.M.Ramasamy, Cuddalore Main Road, Ammampalayam, Attur நிறுவனத்தினரின் சொந்த செலவில் கட்டிட வடிவமைப்பாளர்களை அமர்த்தி தனியார் பங்களிப்பு 100 சதவிகிதம் CSR பங்குத் தொகையுடன் பிரதான மண்டபத்தினை புதுப்பித்து நகராட்சி வசம் ஒப்படைக்க இசைவு தெரிவித்து கடிதம் அளித்துள்ளதினையும் ஏற்று மேற்படி பணிகளை அந்நிறுவனத்தின் சொந்த செலவில் நவீன முறையில் அண்ணா கலையரங்கத்தினை புனரமைப்பு பணிகள், புதுப்பித்தல் பணி மற்றும் அனைத்து இதர பணிகளையும் ரூ.91.45 லட்சம் மதிப்பீட்டில் M/S Rasi Seeds (P) Ltd Chairman Dr.M.Ramasamy. Cuddalore Main Road, Ammampalayam, Attur என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொண்டமைக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

(1) ஆத்தூர் நகராட்சியில் சுதந்திர தின விழாவை முன்னிட்டு இரண்டு நாட்களுக்கு அலுவ. கட்டிடங்களான நகர்மன்ற கூடம், நகர் மன்றத்தலைவர் அலுவலகம்,வருவாய் பிரிவு, பொது பிர. அலுவலகங்கள் மற்றும் உடையார் பாளையத்திலுள்ள காந்தி சிலை முழுவதும் வண்ண, வண்ண அலங்கார விளக்குகளால் அலங்கரித்தல் மற்றும் தேசிய கொடிகள் பல வண்ணகலர்களால் ஆன ஜண்டா ஆகியன வாங்கி அலுவலகத்தில் சப்ளை செய்தல் மற்றும் சுதந்திர தின விழாவை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுவதை அவ்வபோது புகைப்படங்கள் எடுத்து ஆல்பத்தில் தயார் செய்தல் அலுவலகத்தில் சமர்ப்பித்தல் பணிக்கு, ஆகும், தோராய மதிப்பீடு ரூ.30,000/—க்கு பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு 11.08.2023ல் விலைப்புள்ளிகள் கோரப் பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப் படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளிகள் விவரம் | விலை அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.ஜெயவேல் சவுண்ட் சிஸ்டம்1, பழைய பஸ்நிலையம் ,ஆத்தூர். | ரூ.10,000/—குறைவு |
| 2 | திரு.ரமேஷ் சவுண்ட்சிஸ்டம் 10, மாரிமுத்து ரோடு ,ஆத்தூர். | ரூ.10,750/—அதிகம் |
| 3 | திருமதி.மேகலா,சவுண்ட்சிஸ்டம்4/88எவடக்குதெருநாவக்குறிச்சி | ரூ.11,000/— அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் திரு.ஜெயவேல் சவுண்ட் சிஸ்டம் 1, பழைய பஸ்நிலையம், ஆத்தூர்.என்பவரின் மதிப்பீட்டு விலையில் கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. மற்றும்

| வ.எண் | விலைப்புள்ளிகள் விபரம் | விலை அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.அசோக் ஸ்டுடியோ&வீடியோ விநாயகபுரம், ஆத்தூர். | 12X8 ரூ.100 /-<br>6X4ரூ.50 /- குறைவு |
| 2 | திரு.சரவணாஸ்ஸ்டுடியோ&வீடியோகாமராஜனார் ரோடு ஆத்தூர். | 12X8ரூ.110 /-<br>6X4ரூ.55 /- அதிகம் |
| 3 | திரு.கண்ணன்ஸ்டுடியோ& வீடியோ தாயுமானவர் தெரு, ஆத்தூர். | 12X8ரூ.120/-<br>6X4ரூ.60 /-அதிகம் |

மேற்கண்டவாறுபெறப்பட்டமூன்றுவிலைப்புள்ளிகளில் திரு.அசோக்ஸ்டுடியோ &வீடியோ விநாயகபுரம், ஆத்தூர் என்பவரின் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலையில் கொடுத்துள்ள நிறுவனமான, திரு.ஜெயவேல் சவுண்ட் சிஸ்டம்1 பழைய பஸ்நிலையம் ,ஆத்தூர். என்பவரின் விலையினை மன்றம் ஏற்கலாம்.

2.மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.அசோக் ஸ்டுடியோ & வீடியோ விநாயகபுரம் ,ஆத்தூர் என்பவரின் விலைப் புள்ளியினை இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் பணிமேற் கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

(2) ஆத்தூர் நகராட்சிக்கு SFC Arrear Fund 2023-2024ம் ஆண்டிற்கான United Grant தொகையில்ரூ.62.00 இலட்சத்திற்கான சாலை பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குநர், சென்னை அவர்களின் மூலமாக தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்கான செலவினத்தொகை ரூ.21,00/-ஐ விளம்பர செய்த நிறுவனமான Moulis Advertising Services P Ltd என்ற நிறுவனத்தாருக்கு பில் தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

(3) ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பொறியாளர் குடியிருப்பானது நீண்ட காலமாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளாததால் பழுதடைந்த நிலையில் உள்ளது. தற்சமயம் மேற்படி குடியிருப்பினை பயன்படுத்த வேண்டியிருப்பதால் சீரமைக்க வேண்டி உள்ளது. பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பொறியாளர் குடியிருப்பின் சுவர்கள், சீலிங் பகுதிகள், பூச்சுவேலைகள், மேற்கூரை Pressed Tiles, போர்டிகோ தரைதளம், குடிநீர் பைப்புகள், போன்றவற்றை பழுது நீக்கம் செய்து புதியதாக கழிவறை கோப்பைகள் புதியதாக வயரிங் பணிகள் ஆகியன செய்வதற்கு தயார் செய்துள்ள மதிப்பீடுத்தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத்தலைவரின்முன் அனுமதி பெற்று இப் பணிக்கு தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

(4) ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா கலையரங்கம் பழுதடைந்து பயன் படுத்த இயலாத நிலையில் உள்ளதால் . மேற்படி கலையரங்கத்தை புனரமைத்தல் பணிகள் மேற் கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,சேலம் செயல் முறை கடிதம் ந.க.எண்.3454/2022/ எப்(22) , நாள்29.03.2023ல் அனுமதி வழங்கியதன்படி, இந்நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்று M/S Rasi Seeds (P) Ltd என்ற நிறுவனத்தின் உரிமையாளர் Dr.M.Ramasamy Chairman, R&D Centre Cuddalore Main Road, Ammampalayam என்பவரால் அண்ணா கலையரங்கத்தினை பழைய வடிவமைப்பு மாற்றப்படாமல் நவீன முறையில் புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளை ரூ.91.45 இலட்சம் மதிப்பீட்டிற்கு மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் தனது சொந்த செலவில் கட்டட வடிவமைப்பாளர்களை அமர்த்தி தனியார் பங்களிப்பு 100% CSR பங்குத் தொகையுடன் பிரதான மண்டபத்தினை புதுப்பித்தல் பணி செய்து வருவதால் மேற்படி மண்டபத்தின் பழைய பொருட்களான

பழுதடைந்த ஏ,சி சீட், MS கதவுகள் மற்றும் ஜன்னல், அலுமினிய சேனல்கள் போன்ற பயன்பட இயலாத நிலையில் உள்ளதை பொது ஏலத்தில் விட்டு அப்புறப் படுத்துவதற்கு மன்றத்தின் ஒப்புத கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்,

2. மேலும் கலையரங்கத்தினை புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள் நடை பெற்று வருவதால் பழுதடைந்த பொருட்கள் பணிகள் செய்வதற்கு இடையூறாக உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று கழிவுகளை பொது ஏலத்தில் விட்டு அப்புறப் படுத்துவதற்கு தொடர் நடவடிக்கை எடுத்துள்ளதையும் மன்றம் ஏற்கலாம் .

(5) ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பொறியாளர் குடியிருப்பானது நீண்ட காலமாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளததால் பழுதடைந்த நிலையில் உள்ளது. தற்சமயம் மேற்படி குடியிருப்பினை பயன்படுத்த வேண்டியிருப்பதால் சீரமைக்க வேண்டி உள்ளது. பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பொறியாளர் குடியிருப்பின் சுவர்கள், சீலிங் பகுதிகள், பூச்சுவேலைகள், மேற்கூரை Pressed Tiles, போர்டிகோ தரைதளம், குடிநீர் பைப்புகள், போன்றவற்றை பழுது நீக்கம் செய்து புதியதாக கழிவறை கோப்பைகள் புதியதாக வயரிங் பணிகள் ஆகியன செய்வதற்கு தயார் செய்துள்ள மதிப்பீடுத்தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத்தலைவரின்முன் அனுமதி பெற்று இப்பணிக்கு 25.08.2023ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர் , ஆத்தூர் | 0.15%மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திருமதி.டி. பழனியம்மாள்ஒப்பந்ததாரர் , ஆத்தூர் | 0.29% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர், என்ற நிறுவனத்தின் 0.15% மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்து உள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1 மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.செல்லக்கண்ணு , ஆத்தூர், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத்தலைவரின்முன் அனுமதி பெற்று இப்பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(6) ஆத்தூர் நகராட்சிக்கு புதியதாக கழிவு நீர் வாகனம் (Cesspool tankers) இரண்டு எண்ணிக்கை வாங்குவதற்கு SBM (U) 2.0 2022-2023ம் ஆண்டிற்கான திட்ட நிதியில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண் 9192/2022/SBM-1, நாள்21.08.2023ல் ரூ.86.51 இலட்சத்திற்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரபெற்ற செயல் முறை கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ரூ.இலட்சத்தில்)

| வ.எண் | மத்திய அரசின் மான்யம் 50% | மாநில அரசின் மான்யம்33% | நகராட்சி பங்கு தொகை 17% | மொத்தம் | கொள்ளளவு | எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 43.25 | 28.55 | 14.71 | 86.5 | 6000 லிட்டர் | (2) இரண்டு |

அலுவலகக் குறிப்பு – மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

(7)ஆத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.31, அம்பேத்கார் நகர் பகுதியில் NUHM 2023-24 (Announcement No,35) திட்டத்தின் கீழ் புதிய Urban Heatlh Sub Centres (UHSCs) மதிப்பீடு ரூ.30.00 இலட்சத்தில் அமைக்க திட்ட இயக்குநர், National Health Mission, சென்னை அவர்களின் கடித ந.க.எண்1869/.NUHM/SHS/2015, நாள்.03.08.2023 அன்று கடிதம் பெறப் பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிய Urban Heatlh Sub Centres அமைக்க மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலககுறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

(8) ஆத்தூர் நகராட்சிக்குப்பட்ட நகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்து உள்ள பள்ளி கட்டிடங்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள்கடைகள் மற்றும் பொது கழிப்பிடம் போன்ற பாதுகாப்பற்ற நிலையில் உள்ள கட்டிடங்களின் உறுதி தன்மை சான்றுதழ் அரசு பொறியியல் கல்லூரியிடமிருந்து பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே நகரின் பல்வேறு பகுதிகளில் உள்ள பழுதடைந்த கட்டிடங்களை ஆய்வு செய்து உறுதி தன்மை குறித்த சான்று அரசு பொறியியல் கல்லூரியிடமிருந்து பெறவும், அதற்கான கேட்புத்தொகையினை செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

(9)ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18 முதல் 33 வரையுள்ள பகுதிகளின் குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் அடைப்புகள் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக ஜி.ஐ குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும் மற்றும் ஆண்டு பராமரிப்பு பணிகள் தொடர்ந்து செய்ய ஆகும் தோராய மதிப்பீடுத் தொகை ரூ.7.50 இலட்சத்திற்கு நகர் மன்றம் தனது தீர்மானம் எண்743, நாள்31.07.2023ல் அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்கு 29.08.2023ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப் படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | M/Sசெந்தூர்கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்,.<br>ஒப்பந்ததாரார்,ஆத்தூர். | 0.01%மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.ஆர்.செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 0.63%மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S செந்தூர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்,. ஒப்பந்ததாரார், ஆத்தூர்., என்பவரின் 0.01% மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்து உள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/Sசெந்தூர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்,. ஒப்பந்ததாரார், ஆத்தூர். என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(10) ஆத்தூர் நகராட்சிக்குப்பட்ட நகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்து உள்ள பள்ளி கட்டிடங்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள்கடைகள் மற்றும் பொது கழிப்பிடம் போன்ற பாதுகாப்பற்ற நிலையில் உள்ள கட்டிடங்களின் உறுதி தன்மை சான்றிதழ் அரசுபொறியியல் கல்லூரியிடமிருந்து பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே நகரின் பல்வேறு பகுதிகளில் உள்ள பழுதடைந்த கட்டிடங்களை ஆய்வு செய்து உறுதி தன்மை குறித்த சான்று அரசு பொறியியல் கல்லூரியிடமிருந்து பெறவும், அதற்கான கேட்புத்தொகையினை செலுத்தவும் மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்

(11) ஆத்தூர் நகராட்சிக்குப்பட்ட பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்புவரை பயிலும் பள்ளி குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் 10 எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு உணவு வழங்கும் திட்டம் செயல் படுத்த உள்ளது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண் 17404/2022/எம்,1, நாள். 17.08.2023 பெறப்பட்ட கடிதத்தில் காலை உணவு வழங்கும் திட்டம் செயல்படும் பள்ளிகளில் மேற்கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விபரத்தின் படி பேனர்கள் 20.08.2023க்குள் பொருத்தப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி 5அடி நீளம் 2.50 அடி உயரம் கொண்ட 10 எண்ணிக்கையிலான கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விபரத்தின்படி பேனர்கள் அமைக்க உத்தேச செலவினம் ரூ.47,700/– ஆகும் . மேலும், மிகவும் குறுகிய காலம் உள்ளதால் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன்அனுமதியை பெற்று விலைப்புள்ளி கோரி பணிமேற்கொண்டதை மன்றத்தின் அனுமதிக்கு,

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம், மேற்படி செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். .
2. மேற்படி பணிக்கு மிகவும் குறுகிய காலம் உள்ளதால் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன்அனுமதியை பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

(12) ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்புவரை பயிலும் குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் 10 எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு உணவு வழங்கும் திட்டம் செயல் படுத்த உள்ளது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண் 17404/2022/எம்.1, நாள். 22.08.2023 பெறப்பட்ட கடிதத்தில் காலை உணவு வழங்கும் திட்டம் செயல்படும் பள்ளிகளில் மேற்கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விபரத்தின் படி 10 எண்ணிக்கையிலான பள்ளியில் பயிலும் மொத்த மாணவ மாணவிகளின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு Dia 9.5 inch / Height 1.25 inch மற்றும் Dia 9.5 inch /Height 1.25 inch அளவு கொண்ட பிளேட் மற்றும் டம்ளர் வாங்க உத்தேச செலவினம் உத்தேச செலவினம் ரூ. 71,000/– ஆகும். மேலும், மிகவும் குறுகிய காலம் உள்ளதால் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன்அனுமதியை பெற்று விலைப்புள்ளி கோரி பணிமேற்கொண்டதை மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலககுறிப்பு

(1)மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(2)மேற்படி பணிக்கு மிகவும் குறுகிய காலம் உள்ளதால் மேற்படி அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன்அனுமதியை பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

(13) ஆத்தூர் நகராட்சிக்குப்பட்ட பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்புவரை பயிலும் பள்ளி குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் 10 எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு உணவு வழங்கும் திட்டம் செயல் படுத்த உள்ளது. இந்நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் கலந்தாய்வு கூட்ட அறிவுரைகளின் படி காலை உணவு வழங்கும் திட்டம் செயல்படும் பள்ளிகளில் ஏதேனும் ஒரு பள்ளியில் காலை உணவு துவக்கவிழா நிகழ்ச்சி நடத்தவும் மற்றும் நகரின் முக்கிய இடங்களில் பெரிய அளவிலானன எல்இடி திரையின் மூலமாக தமிழக முதலமைச்சரின் காலை உணவு துவக்க விழா நிகழ்ச்சி நேரடியாக ஒளிப்பரப்பு செய்யவும் அறிவுத்தப்பட்டது. அதற்கிணங்க காந்தி நகர் பள்ளியில் நகர் மன்றத்தலைவர் முன்னிலையில் துவக்க விழா நிகழ்ச்சி நடத்த அப்பள்ளியின் முன் பகுதியில் சாமியான பந்தல், டேபிள் சேர்கள் மற்றும் மைக்செட் அமைக்கவும், நகரின் முக்கிய இடங்களான பேருந்து நிலையம் மணி கூண்டு அருகில் மற்றும் நகராட்சி அலுவலகம் முன்பு ஆகிய இரு இடங்களில் பெரிய அளவிலான எல்இடி திரையின் மூலமாக தமிழக முதலமைச்சரின் காலை உணவு துவக்க விழா நிகழ்ச்சி நேரடியாக ஒளிப்பரப்பு செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ. 56,400/– ஆகும். மேலும், மிகவும் குறுகிய காலம் உள்ளதால் மேற்படி

பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதியை பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொண்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1 மன்றம் அனுமதி வழங்கலாம், மேற்படி செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2மேற்படி பணிக்கு மிகவும் குறுகிய காலம் உள்ளதால் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதியை பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(14) மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சேலம், அவர்களின் கடித ந.க.எண் 01/2023 நாள். 17.08.2023 அன்று பெறப்பட்டத்தில் மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளான மருத்துவ முகாம் அனைத்து துறைகளுடன் இணைத்து அரசின் நலத்திட்டங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு எளிதில் சென்றடையும் வகையில் சிறப்பு முகாம் 19.08.2023 அன்று அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் நடைபெற உள்ளது. இம்முகாமிற்கு வரும் மாற்று திறனாளி பயனாளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், சாமியான பந்தல் மற்றும் இருக்கை வசதிகள் செய்து தர மேற்படி கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்கண்ட முகாமிற்கு தேவையான சாமியான பந்தல், டேபிள் சேர்கள் மற்றும் இதர அடிப்படைவசதிகள் செய்ய உத்தேச செலவினம் ரூ. 8900/– ஆகும். மேலும், மிகவும் குறுகிய காலமாக உள்ளதால் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன்அனுமதியை பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொண்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1மன்றம் பதிவு செய்யலாம் . மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி பணிக்கு மிகவும் குறுகிய காலம் உள்ளதால் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன்அனுமதியை பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

(15) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 19 காளமேகம் தெரு , திருவள்ளுவர் தெரு மற்றும் ... வைஸ்யாள் வீடு அருகிலுள்ள நகராட்சிக்கு சொந்தமான பொதுகிணற்றின் மேல் பகுதியை மூடியில்லாமல் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாகவும் மற்றும் மேற்கண்ட கிணறுகளிலுள்ள தண்ணீரை பொதுமக்கள் பயன் பாட்டிற்கு கொண்டுவர நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார் .அதன்படி மேற்கண்ட இடம் நேரடி ஆய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட கிணறுகள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. மேலும் மேற்கண்ட கிணறுகளில் உள்ள தண்ணீரை குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு கொண்டு வர மின் விசை மோட்டார்கள் அமைத்து தண்ணீர் வசதி செய்யவும் மற்றும் கிணற்றின் மேல் பகுதியில் இரும்பாலான மூடி அமைத்து பாதுகாப்பு செய்யவும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

(1) மன்றம் அனுமதிவழங்கலாம்.
(2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(16) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 4, கீழ்பாரி தெருபகுதியில் பழுதடைந்த கற்களால் அமைக்கப்பட்ட சாலையினை சீரமைக்க தருமாறு நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார். அதன்படி மேற்கண்ட இடம் நேரவு செய்யப்பட்டதில் மேற்கண்ட பழுதடைந்த கற்களால் சாலையின் மேல்பகுதி சிமெண்ட் காண்கீரீட் தளம் அமைக்க உத்தேச செலவினம் ரூ.2.32 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம், மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(17) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ள தேவையான திட்ட பிரேரணைகள் தயார் செய்து சமர்ப்பிக்குமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களால் கலந்தாய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, இந்நகர் மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நகரின் பல்வேறு பகுதிகளில் பழுதடைந்த மழைநீர் வடிகால் வசதியை சீரமைக்கவும், தேவையான இடங்களில் புதியதாக மழைநீர் வடிகால் வசதி அமைக்கவும் மற்றும் நகாரட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் கூடுதல் கட்டிடங்கள் அமைக்க மதிப்பீடுகள் தயார் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி புதிய மழைநீர் வடிகால் வசதி அமைக்க தேவையான Hydralic Design மற்றும் Levels Suvery செய்யவும் மற்றும் பள்ளிகட்டிடங்கள் அமையபட உள்ள

இடத்தில் மண் பரிசோதனை மற்றும் Structural Design செய்து வடிவமைக்க தனியார் கலந்த ஆலோசகர் (Private Consultant) மூலம் திட்ட பிரேரானைகள் தயார் செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம், செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்,

(18) பொது சுகாதாரப் பிரிவில் நகராட்சி (அப்பம்மசமுத்திரம்) கலவை உரக்கிடங்கில் ஹிட்டாச்சி இயந்திரம் மூலம் திடக்கழிவுகளை அகற்றும் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.683, நாள்.30.06.2023–ல் நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 07.08.2023–ந் தேதியன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | Jagan earth movers, 107/20c, Namakkal road, Opp Bharathi Theatre, Rasipuram(Tk), Namakkal(Dt). | ஹிட்டாச்சி இயந்திரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு வாடகை | ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) |
| | | ஓட்டுநர் படி நாள் ஒன்றிற்கு | ரூ.700/– (ரூபாய் ஏழுநூறு மட்டும்) |
| 2. | R.S.K.Earth movers, 36/A, Sakthi nagar Vadakkukadu, Mullaivadi-Po, Attur. | ஹிட்டாச்சி இயந்திரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு வாடகை | ரூ.1800/– (ரூபாய் ஆயிரத்து என்னூறு மட்டும்) |
| | | ஓட்டுநர் படி நாள் ஒன்றிற்கு | ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **R.S.K.Earth movers, 36/A, Sakthi nagar Vadakkukadu, Mullaivadi-Po, Attur.** (ஹிட்டாச்சி இயந்திரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு வாடகை – ரூ.1800/– , ஓட்டுநர் படி நாள் ஒன்றிற்கு –ரூ.500/– ) நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

19) ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் குடியிருப்பில் பழுதடைந்த தண்ணீர் கசிவு ஏற்பட்டுள்ளதை பழுது நீக்கம் மற்றும் சீரமைத்தல் பணிகள் மேற்கொள்ளவும் ,பழுதடைந்து உள்ளவைகளை மாற்றி புதியதாக பி.விசி டேங், பைப் லைன்,வயரிங் பணிகள், கதவு மராமத்து

வாஸ்பேஷன், சேர் டேபிள்,சோபா மின்சாதனகள்மற்றும் தேதவயான பொருட்கள் ஆகியன புதியதாக வாங்குவதற்கு தயார் செய்துள்ள மதிப்பீடுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஏற்கலாம்.

20) ஆத்தூர் நகராட்சிக்கு 15 வது மத்திய நிதிக்குழு மான்யம் 2023–2024ம் ஆண்டிற்கான Untied Grant தொகையில்ரூ.77.00 இலட்சத்திற்கான சாலை பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குநர், சென்னை அவர்களின் மூலமாக தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்தற்கான செலவினத்தொகை ரூ.21,521/-ஐ விளம்பர செய்த நிறுவனமான திருவாளர்கள் என்த்ரால் கம்யூனிகேசன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தாருக்கு பில் தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.2485/2023/இ1)

30/08/23

நகர்மன்ற தலைவர்.